348—

குளத்தூர் தொகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்

**25326*—திரு. சி. குழந்தைவேலு:*

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, கீரனூர், இலுப்பூர் மற்றும் விராலிமலையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின் பேரில் வீட்டு வசதித் திட்டத்தில் பல புதிய சாதனைகளை ஏற்படுத்தி வரும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் எனது தொகுதியில் அதாவது குளத்தூர் தொகுதியில் கீரனூர், இலுப்பூர், விராலிமலை ஆகிய 3 நகரங்கள் உள்ளன, அங்கே பலதரப்பட்ட அரசு ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள், அவர்கள் தினசரி திருச்சியிலிருந்தும், புதுக்கோட்டையிலிருந்தும் பேருந்துகளில் வேலைக்கு வருகிறார்கள். வரும்போது சரியான நேரத்தில் அலுவலகம் வந்து சேரமுடியவில்லை. தற்போது இப்படிப்பட்ட நகரங்களில் வீட்டுவாடகையும் அதிகரித்துவிட்டதால் அங்கே குடியிருக்க வாய்ப்பு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலாவது அவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடு கட்டிக்கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டுவசதித் திட்டத்தில் அடுக்குமாடி வீடுகள் கட்டப்படுவதில்லை. கீரனூர் பகுதியில் சிறிய, நடுத்தர நகர வீட்டுவசதித் திட்டம் பகுதி-1-ல் 71 வீடுகள் கட்டுகிற பணிக்காக ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணிகள் துவங்கும் தருவாயில் உள்ளது. எனவே அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் தற்போது இல்லை. அதைப்போல இலுப்பூர் பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டுவசதி பகுதி-2 திட்டம் மேற்கொள்ள இருமுறை விளம்பரம் செய்தும் அங்கே வீட்டுவசதிக்கு

1994 ஏப்ரல் 22]

போதுமான வரவேற்பு இல்லை. அப்படி போதுமான வரவேற்பு இல்லாத காரணத்தாலும், வாய்ப்பு இல்லாததாலும் அங்கே சாத்தியக்கூறு இல்லை. மேலும் விராலிமலைப் பகுதியில் வீட்டுவசதித் திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினுடைய செயற்குறிப்பில் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கீரனூரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பகுதி-2-ல் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டுவதற்கு ஆணையிட்டதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 349. திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

349—

தாளவாடி மலைப் பகுதியில் பழப்பண்ணை அமைத்தல்

***24774**—திருமதி அ. தி. சரஸ்வதி:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) தாளவாடி மலைப் பகுதியில் பழப்பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தாளவாடி மலைப் பகுதியில் பழப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) எனவே, கேள்வி எழவில்லை.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரி வாரி வழங்கும் குணம் படைத்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கு இடம் இல்லை. நமது அமைச்சர் அவர்கள் தாளவாடியில் பழப்பண்ணை அமைக்கும் திட்டம் இல்லை என்று சொன்னாலும், சத்தியமங்கலம் பகுதியில் பன்னாரிக்கு அருகிலே ராஜ் நகர் என்ற இடத்திலே பழப்பண்ணை அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடி என்பது பெரியார் மாவட்டத்தினுடைய எல்லைப் பகுதியில் இருக்கிறது. மலைப் பகுதி. அங்கே பழப்பண்ணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.